**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :MCOP No:30/2021 தேதி: 14.06.2024**

**ம.சா. 1 – சரஸ்வதி**

**குறுக்கு விசாரணை :** ( 2வது எதிர்மனுதாரர் தரப்பில்)

என் மகன் ஓட்டி சென்ற பல்சர் வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. என் மகன் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை இரவல் வாங்கி செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் மகன் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை வாங்கி சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் மகனின் கவனகுறைவு தான் காரணம் என்று அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முன்னால் சென்ற வாகன ஓட்டுநர் தான் காரணம். முன்னால் சென்ற வாகன ஓட்டுநர் தான் காரணம் என்று புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். என் மகன் மாதம் ரூபாய் 15 ஆயிரம் சம்பாதித்து வந்தான் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். என் மகன் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை இரவல் வாங்கி சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டதால் 2வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2வது எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.